விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 26 | துல்ஹஜ்தா 3 | இதழ் 21

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 08-06-1989

## பிரேமா கோரிக்கை: ராஜீவ் நிராகரிப்பு!

(கொழும்பு)

இந்திய அமைதிப் படையை விலக்கிக் கொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விடுத்த ஜூலை 29ம் திகதி காலக்கெடு கோரிக்கையை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நிராகரித்துவிட்டதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் நேற்றுவெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியப்படை வெளியேறுவதற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடக்கும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சபை தனது மக்களின் பாதுகாப்புக்கெனப் படை ஒன்றை அமைக்கும் வரை அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான ஒப்பந்தத்தை ஏற்

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைதிப்படை வெளியேற்ற விவகாரம்:

# தெற்கில் மாணவர் ஆர்ப்பாட்டம்

# பொலிஸ் சூட்டில் மாணவர் பலி

## தடியடி, கண்ணீர்ப்புகை!

### பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன

(கொழும்பு)

இந்திய அமைதிப் படையை விலக்கிக் கொள்ளுமாறும், தடுப்புக்காவலில் உள்ள மாணவர்களை விடுதலை செய்யுமாறும் கோரி நேற்று தென் பகுதி எங்கும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களின்போது பொலிஸார் சூட்டில் ஒரு மாணவன் பலியானார்!

கொழும்பிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

மாணவர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக இன்றும், நாளையும் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் மூடிவிடுவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## நேற்றும் ஹர்த்தால்

(வடமராட்சி)

கோப்பாய், நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் ஆகிய பகுதிகளில் நேற்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை மற்றும் வடமராட்சிக்கான போக்குவரத்துச் சேவைகளும் இப்பகுதிகளூடாக நடைபெறவில்லை.

காலையில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறை டிப்போவிற்குச் சொந்தமான பஸ் ஒன்று, சிலரால் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து சகல போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது.

## இரு இளைஞர் பலி

### தம்பசிட்டியில் சம்பவம்

(வடமராட்சி)

தம்பசிட்டியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இரு இளைஞர்கள் பலியானார்ககள்.

கடந்த செய்வாய்த்கிழமை மாலை தம்பசிட்டி சாளம்பை என்னும் இடத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இறந்தவர்களான திருநாவுக்கரசு கிருபாகரன் (வயது 23) ஏரம்பமூர்த்தி விஜயமூர்த்தி -விசு (வயது 17) என்பவர்கள் இருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களாவர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சீருடையில் பொலிஸார்

[யாழ்ப்பாணம்]

யாழ்.செயலகவளவில் இலங்கைப் பொலிஸார் சீருடையில் பணியாற்றினார்கள்.

செயலகத்தில் நேற்றும் வாகனங்களுக்குப் பாஸ் வழங்கப்பட்டது.

## ஜனாதிபதி பிரேமதாசாவிடமிருந்து பிரதமர் ராஜீவுக்கு மற்றும் ஒரு கடிதம்

(கொழும்பு)

இலங்கை-இந்திய உடன்படிக்கை தொடர்பாகவும், இந்திய அமைதிப்படைவாபஸ் குறித்தும் மற்றுமொரு கடிதத்தை விரைவில் இந்தியப் பிரதமருக்கு தாம் அனுப்பி வைக்கவுள்ளதாக இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா

(8-ம் பக்கம் பார்க்க)

## இருவர் விசாரணையில்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து, யாழ். இந்து மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி செல்வி தர்மலிங்கம் குலரஞ்சினியும் (18-வயது) இவரது சகோதரரான துஷ்யந்தனும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## அரசியல் இணைப்பு அலுவலகம்

[யாழ்ப்பாணம்]

யாழ், அரச செயலகத்தில் உள்ள மாவட்ட அமைச்சரின் காரியாலயம், வடக்கு-கிழக்கு மாகாண சபை அரசியல்

(8-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் வரும் மா கப்பல்

(வடமராட்சி)

திருகோணமலை பிறிமா ஆலையிலிருந்து காங்கேசன் துறைமுகத்திற்கு மாக் கப்பல் ஒன்று விரைவில் வரவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். உணவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் இன்று வேலைக்கு திரும்புவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று தொடக்கம் தமது கடமைகளுக்கு திரும்புவதென தீர்மானித்துள்ளனர்.

அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சம்மேளனத்தின் கோரிக்கைகளை உயர்கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டதினால் நேற்றுமுதல் தமது வேலை

(8-ம் பக்கம் பார்க்க)

## விமான விபத்தில் 160 பேர் பலி

(லண்டன்)

தென் அமெரிக்காவில்நேற்று ஏற்பட்ட விமான விபத்தில் 160 பேர் பலியானார்கள்

## சீன நிலைமை

(பீசிங்)

சீனவில் தொடரும் வன்முறைகளைத் தொடர்ந்து சகல வெளிநாட்டவர்களும் அங்கிருந்து வெளியேறுவது பாதுகாப்பானது என்று ஜப்பான் ஆலோசனை கூறியுள்ளது:

## மதிய உணவுக்குப் பதிலாக பெற்றோருக்கு பணம்:

## யாழ்.மாவட்ட பாடசாலைகளில் நடைமுறைக்கு வராது!

(யாழ்ப்பாணம்)

மதிய உணவுக்குப் பதிலாக பெற்றோருக்குப் பணம் வழங்கும் திட்டம் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பாடசாலை அதிபர்களுக்கு [illegible] விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''மதிய உணவு வழங்கல் திட்டம் ஒவ்வொரு பாடசாலையிலும் வழமைபோல் நடைபெறச் சகல பாடசாலை அதி[illegible] வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய தேசிய முன்னணி கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கையிலிருந்து உடனடியாக இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும் என்று தேசிய முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பிரதான ஏழு எதிர்க்கட்சிகளின் கூட்டணியான தேசிய முன்னணியின் [illegible]க்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்று டில்லியில் நடைபெற்ற இக்கூட்டத்தின் முடிவில்; முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஜனதா தள் கட்சியின் தலைவர் திரு. வி. பி. சிங் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றினார்.

''இந்தியப் படையை வெளியேற்றுமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருப்பதால் மதிப்புடனும் உண்மையுடனும் திரும்பவேண்டியது நமது கடமை'' என்று திரு. சிங் வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை மாணவருக்கு கல்வி அபிவிருத்தி நிதியம்; 18-ம் திகதிமுதல் அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)

ஏழை மாணவர்களின் கல்வி நலனை முன்னிட்டு புதிதாக கல்வி அபிவிருத்திநிதியம் ஒன்று விரைவில் ஏற்படுத்தப் படவுள்ளது.

ஏழை மாணவர்களுக்கு தேவைப்படும் கல்வித்தேவைகளை நிறைவுசெய்யும்வகையிலான புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையத்துக்கு தேவையான நிதி கொடி விற்பனை மூலமும், சமூகசேவையாளர்களிடம் இருந்தும் பெறப்படும் என்றும் அதேநேரம் பாடசாலைகளும் இந்த நிதியத்துக்கு உதவமுடியும் என்றும் பாடசாலைகளினால் இந்த நிதியத்துக்குப்பெற்றுக்கொடுக்கப்படும் மொத்த உதவியில் 20 வீதம் அந்தப் பாடசாலைகளுக்கே செலவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப் புதிய நிதியம் இம் மாதம் 18ம் திகதி தொடக்கம் இயங்கத் தொடங்கும். கல்விஅமைச்சர் இந்த நிதியத்தை அனுராதபுரத்தில் வைத்து தொடக்கிவைப்பார்.

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கரந்தை கரந்தைக்குளவத்தை முருகமூர்த்தி கோவில் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

இம் மாதம் 17ம் திகதிவரை 10 நாட்கள் நடைபெறும்இந்த உற்சவத்தின்போது தினமும் காலை விசேஷ அபிஷேக ஆராதனையும் மாலை திருவிழாவும் நடைபெறும்.

இறுதிநாள் சனிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும்.


## வரி விளம்பரம்

### தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம், வெண்கலம் உயர் விலைக்கு எடுக்கப்படும். பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2752)

ஆங்கில தட்டெழுத்தாளர் பெண்களுக்கு வேலைவாய்ப்பு. நேரில் தொடர்பு கொள்ளவும் ''சுப்ப கனன்'' கொப்பி சேவை, 13, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (சி-2908)

### விற்பனைக்கு

சீனிவாசகம் வீதி கொட்டடியில் ஐந்து அறைகளைக் கொண்ட சகல வசதிகளையும் உடைய ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: பெனடிட், கண்டி ரோட், (A. G. A.) காரியாலயத்திற்குப் பக்கத்தில், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (சி 2914)

Sony Sterio Deck Set, Yamaha Deck, Akai Deck, Pioneer Equilizer, Tamil Audio Records உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரையில்ஸ், திருநெல்வேலி. (சி 2913)

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி 2726)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# 10,000 ஆசிரியருக்கு நியமனம் வழங்கப்பட்டது

[கொழும்பு]

இவ்வருட ஆரம்பம்தொடக்கம் இதுவரை 10 ஆயிரத்துக்கு அதிகமான ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கல்விச் சேவைக் கமிட்டித் தலைவர் தெரிவித்துள்ளார்.

''இவ்வருடம் தொடக்கம்இதுவரை 4,071 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. இதில் 3,662 பேர் வெளிவாரிப்பட்டதாரிகள் 21 விஞ்ஞான ஆசிரியர்களும் இதில் அடங்குவர். நடன, சங்கீத ஆசிரியர்களாக 1000 பேர் நியமனம் பெற்றனர். தமிழ் நடன, சங்கீத ஆசிரியர் 100 பேர் தமிழர்கள்.

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களாக 5,671 ஆசிரியர்களும், 109 தோட்டப் பாடசாலை ஆசிரியர்களும் இவ்வாறு நியமனம்பெற்றுள்ளனர்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பனம்பொருள் உற்பத்தி அதிகரிப்பு: உயர் அதிகாரிகள் ஆராய்கிறார்கள்

(வண்ணார்பண்ணை)

பனம்பொருள் உற்பத்திகளை மேலும் அதிகரிப்பது குறித்து ஆராய்வவதற்காக பனை அபிவிருத்திச்சபையின் உற்பத்திப் பிரிவு உத்தியோகத்தர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 12ம் திகதி சபையின் சந்தைப் படுத்தும் பிரிவு அலுவலத்தில் நடைபெறவிருக்கிறது.

உற்பத்திகளை அதிகரித்தல், உற்பத்தியாளர்களுக்கு உதவுதல், உற்பத்திகளைச் சந்தைப் படுத்தல்; ஏற்றுமதிக்குரிய உற்பத்திகளுக்கு ஊக்கமளித்தல், கிராமங்களில் கொள்வனவை விரிவுபடுத்தல் உற்பத்தியாளர்களை கிராமமட்டத்தில் அதிகரித்தல் போன்ற விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன.

சபையின் இயக்குனர்கள் சபையின் செயலாளர், கணக்காளர், உட்பட சந்தைப்படுத்தல், உற்பத்தி, அபிவிருத்திப் பிரிவுகளின் உத்தியோகத்தர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

# மதிய உணவுத் திட்டம்: விபரங்கள்கோரப்படுகின்றன

(கொழும்பு)

அரசினால் தற்போது பாடசாலைகளில் அமுல் நடத்தப்பட்டுவரும் இலவச மதிய உணவுத் திட்டம் தொடர்பாகப் பாடசாலைகளினால் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கும்படி கல்வியமைச்சின் பாடசாலைகள் தொடர்பான பிரதம ஆலோசகர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

தினமும் வழங்கப்படும் உணவு வகைகள், அதன் தன்மைகள், வீண் விரயம், நிதி தொடர்பானநடவடிக்கைகள், பெற்றோரின்பங்களிப்புமுதலிய பல்வேறு விடயங்கள் பற்றிய சகல விபரங்களையும்இம் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் பிரதேசக் கல்விக் காரியாலயங்கள் ஊடாக அனுப்பிவைக்கும்படி அவர் கேட்டுள்ளார். (து)

# யாழ். தபால்நிலையத்தில் வீண் விரயங்களைத் தடுக்க ஆலோசனைக் குழு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண பிரதம தபாலகத்தில் விரயங்களைத் தடுப்பதற்கும், வேலைகளைத் துரிதப்படுத்துவதற்குமான ஆலோசனைகளை வழங்குவதற்கு முகாமைத்துவக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் இக் குழுவை நியமித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் திரு. சு. பரராசசிங்கம் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட இக் குழுவில் தபால் அலுவலக சிற்றூழியர் ஒருவரும் ஊழியர் தொழிற் சங்கப் பிரதிநிதி ஒருவரும், தபால் உத்தியோகத்தர்கள் இருவரும் அடங்குவர்.

தபாலகத்தில் விரயங்களைத் தடுத்தல் கடமைகளைத் துரிதப்படுத்தல் போன்றவற்றிற்கான ஆலோசனைகளை இக் குழு வழங்கும்.

# பாடசாலை மீண்டும் இயங்குகிறது

(ஒட்டுசுட்டான்)

முத்துஐயன்கட்டு இடதுகரை அ. த. க. பாடசாலை பல மாத இடைவெளிக்குப் பின்பு மீண்டும் பழைய இடத்தில் இயங்குகிறது.

இந்திய அமைதிப்படையினர் இப்பாடசாலையில் பல மாதங்களாக முகாமிட்டிருந்ததனால் இங்கு கல்வி கற்றுவந்த மாணவ, மாணவிகள் வேறு பாடசாலைகளில் கல்வி கற்றுவந்தனர்.

பாடசாலைகளிலிருந்து இந்தியப் படையை வெளியேற்றுவது குறித்து பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன், கொத்தணி அதிபர் திரு. தா. சிவசம்பு. பாடசாலை அதிபர் திரு. எஸ். மகாலிங்கம், கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. வி. பசுபதி ஆகியோர் கொண்ட குழு முகாம் பொறுப்பதிகாரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே படையினர் பாடசாலை வளவை விட்டு வெளியேறினர்.


## விற்பனைக்கு

பதனிடப்பட்ட பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு.

COUNTRY OF ORIGIN HOLLAND

**பிள்ளையார்**

259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் (சி-2785)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம்

## கலைப்பயிற்சி ஆரம்பம்

யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கத்தின் கலை, கலாசார பரிவர்த்தனையின் அடிப்படையில்

பரதநாட்டியம், வீணை, மிருதங்கம், கர்நாடக சங்கீதம், பண்ணிசை நவீன ஓவியப் பயிற்சி வகுப்புக்கள்

முன்னோடி ஆசிரியர் குழுவினால் பயிற்றப்படவுள்ளது.

புதிய வகுப்புக்கள் 10-06-89 சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

அதி சிறந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:-

**ALLIANCE FRANCAISE DE JAFFNA,**

(யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம்)

130, 1-ம் குறுக்கு வீதி,

யாழ்ப்பாணம்.

(ச 258)

## A/L விஞ்ஞான மாணவர்களுக்கு

## எறியம்

ஆரம்பம்: 12-06-89 MON. & WED. 2-45—4-45.

ஆசிரியர்: MR. கணேசன் B. Sc.

## வெப்ப இரசாயனம்

ஆரம்பம்: 10-6-89

BATCH I—SAT. & SUN. 9-30—10-30

BATCH II—SAT. & SUN. 11-30—12-30

ஆசிரியர்: MR. நாகரட்னம் B. Sc.

3-ம் குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம்.

(எ 267)

## CENTRAL INDUSTRIES LIMITED

(FULLY OWNED SUBSIDIARY OF CENTRAL FINANCE CO. LTD.)

**POST OF SALES REPRESENTATIVE JAFFNA DISTRICT**

NATIONAL P. V. C.

As a fast growing manufacturing concern catering to an expanded market in a very competitive field we require young, dynamic Sales Representative who is enthusiastic and results orientated. If you are in the age group 20—25, personable, fluent in English and Tamil and have a flair for selling, this could be your opportunity to build a rewarding career with us.

Previous experience, though not essential, would be an advantage.

We offer excellent working conditions and an attractive remuneration package.

Apply within 10 days giving full bio-data and naming two referees not related to you.

ASST. GENERAL MANAGER,

**Central Industries Limited,**

270, VAUXHALL STREET, COLOMBO-2.

(A 261)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனாவில் உள்நாட்டுப் போர்
# 300 இராணுவத்தினரை காணவில்லை
# தாக்குதலில் 200 படையினர் பலி

## பல நகரங்களிலும் கலவரம்

(பீக்கிங்)

சீனாவில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் பெரும் இராணுவத் தாக்குதல்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காணமல் போயுள்ளதாக தெரியவருகிறது. இருநூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுமுள்ளனர். பலியான ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை நாலாயிரம் வரை அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன-

மாணவர் ஆர்ப்பாட்டத்தை இராணுவ ரீதியில் கட்டுப்படுத்த அதிபர் லீ-பெங் எடுத்த கடும் உத்தரவு சீன இராணுவத்திடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதன் விளைவாகவே இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காணமல்போயுமுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் மாணவர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுவந்த 'தியனென்மென்' சதுக்கம் தற்போது அரசு சார்பு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்ற மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரமாகும்.

இந்த வெளியேற்று நடவடிக்கையில் அரசு தரப்பு இராணுவத்திற்கும் எதிர்ப்பாளரிடையேயும் இடம்பெற்ற பல தாக்குதல்களில் சிக்கி 500க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆர்ப்பாட்டங்கள் ஏனைய பல நகரங்களிலும் பரவியுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த அந்தந்த நகரங்களிலும் தற்போது இராணுவச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது, இங்கும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

## அரசு அதிகாரி அறிக்கை

சீனாவில் கடநத சிலதினங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் குறித்து நேற்று அரசு உயரதிகாரி முதல் தடவையாக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

இராணுவத்துடனான மோதலில் மாணவர்கள் 23 பேர் மட்டுமே பலியானதாகவும் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியும். காணமல் போயுமுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்களை கைவிட்டு அமைதி வழிக்கு திரும்புமாறு மாணவர்களை கேட்டுக்கொண்ட அவர் இந்த உத்தரவுகளை மீறும் பட்சத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் கடுமையாக அமுல்படுத்தப்படுமென்று எச்சரித்துள்ளார்.

## ஆப்கான் யுத்தத்தில் சோவியத்தின் 300 துருப்புகள் போர் கைதிகள்: விடுதலை கோரி பேச்சுக்கள்

(இஸ்லாமபாத்)

ஆப்கானிஸ்தானில் அரசு எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களுடன் இடம்பெற்ற ஏழுவருட யுத்தத்தில் கிளர்ச்சியாளர்களினால் பிடிக்கப்பட்ட நானூறுக்கும் மேற்பட்ட சோவியத் போர்க்கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான பேச்சுக்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாயின.

இப்பேச்சுக்கள் பாகிஸ்தானில் நடைபெறுகிறது. பேச்சுக்களில் சோவியத் அதிகாரிகளும். ஆப்கான் கிளர்ச்சியாளர்களும் கலந்து கொள்கின்றனர். கைதிகள் விடுதலை தொடர்பாக முன்னரும் பேச்சுக்கள் நடந்துள்ளபோதிலும அதில் முடிவெதுவும் எடுக்கப்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஏழுவருடங்களுக்குமேல்இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போரில் அரசுக்கு ஆதரவாக கடந்த நாலு மாதங்களுக்கு முன் சோவியத் படைகள் கிளர்ச்சியாளர்களுடன் ஏழு வருட யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. இதில் சோவியத் இராணுவ தரப்பில் சுமார் பதினையாயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சோவியத் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது.

இந்தக் காலப்பகுதியில் ஆப்கான் கெரிலாக்களால் நானூற்றுக்கும் மேற்பட்ட சோவியத்படையினர் பிடிக்கப்பட்டு தற்போது போர்க்கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்கும்முயற்சியிலேயே தற்போது சோவியத் அரசு ஆப்கான் கெரிலாக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது.

இதற்கிடையில் ஆப்கானில் ஜலலாபாத், கோர்கிஸ் பகுதியில் கிளர்ச்சியாளர்நிலைகளின் மீது படையினர் மேற்கொண்ட விமான, பீரங்கித் தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக சோவியத்தின் செய்தி நிறுவனமான 'டாஸ்' தெரிவித்துள்ளது.

இதேவேளை தாம் மேற்கொண்ட பல தாக்குதல்களில் கடந்த சில தினங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானதாகவும் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கொமெய்னியின் ஜனஸா ஹெலிகொப்டரில் எடுத்துச் செல்லப்பட்டது

[தெஹ்ரான்]

மறைந்த ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் ஜனஸா நேற்று முன்தினம் இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள தெஹ்ரானில் திரண்டிருந்த லட்சோபலட்சம் மக்களும் முண்டியடித்துக் கொண்டு மறைந்த தலைவரின் ஜனஸாவை நோக்கிவந்ததில் ஊர்வலம் பல தடவைகள் தடைப்பட்டது. நிலைமையை சமாளிப்பதற்காக ஜனஸா ஹெலிகொப்டரில் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த இறுதி ஊர்வலத்தில் சுமார் 50 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். இதில் ஏற்பட்ட சன நெரிசலில் 18 பேர் வரை மரணமடைந்துள்ளனர்.

## கொலை முயற்சியிலிருந்து பிரதமர் லீ உயிர்தப்பினார்

கடந்தஞாயிற்றுக்கிழமை 'தியனென்மென்' சதுக்கத்தை பார்வையிட வந்த சீன பிரதமர் திரு. லீ-பெங் கொலைமுயற்சி ஒன்றிலிருந்து மயிரிழையில் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். இவரை பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டதாகவும் பின்னர் அந்த அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அகற்றப்பட்ட இடங்களின் விபரங்களை மற்றோர் பாதுகாப்பு அதிகாரி பிரதமருக்கு விளக்கமாகக் கூறிக்கொண்டு வந்தவேளையில் திடீரென தமது துப்பாக்கியை உருவி ஓர்அதிகாரிபிரதமரைநேருக்கு நேர் நின்று நான்கு தடவைகள் சுட்டார். துப்பாக்கிச் சூடுகள் அவரது வலது கைப் பகுதியை தாக்கியது.

உடனடியாக அருகில் நின்ற மற்ற அதிகாரி ஒருவர் சுட்டவரை நோக்கி மூன்று தடவைகள் சுட்டதாகவும் அவர் ஸ்தலத்திலே பலியானதாகவும் கூறப்படுகிறது. பிரதமர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துக் செல்லப்பட்டு வைத்திய சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

சீனாவில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும்இராணுவ நடவடிக்கைகளை கண்டித்து பிரான்சும் பொருளாதார' இராணுவ தடைகளை சீனாவிற்கு எதிராக விதித்துள்ளது. முதலில் அமெரிக்காவே இந் நடவடிக்கையில் இறங்கியது. பிரிட்டனும் இதுபற்றி தற்போது பரிசீலித்துவருகிறது.

இதற்கிடையில் சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்கள் விமான நிலையங்களிலும் பிறநாட்டுத்தூதரங்களிலும் தஞ்சமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இவர்களை சொந்த நாடுகளிற்கு திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

## இந்திரா நினைவாக 'படிக ஆறு'!

(புதுடில்லி)

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சுடப்பட்டவேளையில் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடந்துவந்த பாதையில், 'படிகஆறு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது,

செக்கோஸ்லாவாக்கிய பேரரசிரியர்ஒருவரின் தலைமையிலான குழு ஒன்றினால் இரண்டு வருடங்களில் இந்த 'படிகஆறு' அமைக்கப்பட்டது.

இந்தப் படிகஆறில் அமைக்கப்பட்டுள்ள படிகங்களில் சூரிய கதிர்களைப் பிரதிபலிக்கும்போது ஆறு ஓடுவதுபோல் இருக்கும் என்று பேராசிரியர் கூறினார்.

திருமதி காந்தி தொடர்ந்து நடப்பதையும் அவரது செயல் வேக ஆளுமையையும் அவரது கருத்துக்களும் இன்னமும் இந்திய மக்களுடன் இருக்கின்றன என்பதையும் அது எடுத்துக்காட்டும் என்றும் அவர் கூறினார்.

## நேற்றும் நீண்ட 'கியூ'

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்களுக்கு 'பாஸ்' எடுப்பதற்காக நேற்றும் யாழ் கச்சேரியில் நூற்றுக்கணக்கானவர்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டனர்.

நேற்று நண்பகலுக்குப் பின்னரும் 'பாஸ்'கள் வழங்கப்பட்டன.

## மின்சாரத்திற்கு இளைஞர் பலி

(வவுனியா)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற முயன்ற இளைஞன் மின்சாரம் தாக்கி மரணமானார்.

வவுனியா மரக்காப்பளை என்னுமிடத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

27 வயதான தங்கராஜா என்ற இளைஞனே மரணமானவராவார்.

## பிரான்ஸ் 106 நிலத்தடி அணுகுண்டு பரிசோதனை

(பாரிஸ்)

பிரான்ஸ் இதுவரை 106 நிலத்தடி அணுகுண்டு வெடிப்பு பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது. கடந்த வாரம் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நிலத்தடி அணுகுண்டு வெடிப்பு பரிசோதனையை நியூஸிலாந்தும், ஆஸ்திரேலியாவும் கண்டனம் செய்துள்ளன.

கடந்த வாரம் பசிபிக் பகுதியில் முரோரா என்னுமிடத்தில் இவ்வாறு 20 கிலோதொன் எடையுள்ள அணுகுண்டொன்றை வெடிக்கச் செய்து பரிசோதனையில் ஈடுபட்டது. இது பிரான்ஸ் மேற்கொண்ட 106-வது நிலத்தடி பரிசோதனையாகும்.

வருடத்தில் எட்டு நிலத்தடி அணுப் பரிசோதனையை மேற்கொண்ட பிரான்ஸ் அடுத்த ஆண்டு முதல் அதனை ஆறாக குறைக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. பொருளாதார நெருக்கடிகளினாலே இவ்வாறு பரிசோதனையின் அளவு குறைக்கப்படுகிறதென்றும் அதன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதமும் பிரான்ஸ் இவ்வாறு சோதனை ஒன்றில் ஈடுபட்டது. அதன்போது இரண்டு கிலோதொன் எடையுள்ள அணுகுண்டையே வெடிக்க வைத்து பரிசோதித்தது. இதற்கும் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்திலிருந்து எதிர்ப்புகள் கிளம்பியிருந்தது.

## அமைதிப்படை வெளியேற்றம்: பேச்சுவார்த்தை நடத்த இருநாடுகளும் சம்மதம்!

(புதுடில்லி)

இலங்கை - இந்திய உடன்பாட்டின் அடிப்படையில் இந்திய அமைதிப்படையை இலங்கையிலிருந்து வாபஸ் பெறுவது குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடாத்த இருநாடுகளும் இணங்கியுள்ளதாக புது டில்லியில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இந்திய அமைதிப் படை வாபஸ் குறித்து பிரதமர் திரு.ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்த விஷேட செய்தியை பரிசீலித்த பின்னர் திரு. காந்தி இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் திரு. பேர்னுட் திலகரத்னவுடன் இதுபற்றி பேச்சு நடாத்தினார்.

இதன்பின்னர் திரு. திலகரத்ன இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுக்களை அடுத்து புதுடில்லியில் இந்திய அதிகாரிகளினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையிலேயே பேச்சுக்கள் தொடர்வது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி செய்திகளுடன் திரு. பேர்னுட் திலகரட்ண நேற்று முன்தினம் நாடுதிரும்பினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கீழே விழாதிருப்பது நமக்குப் பெரிய பெருமையல்ல ஆனால் விழுந்தபோதெல்லாம் எழுந்திருப்பதே பெருமைக்கு ரியது.

— கன்ஃபூஷியஸ்

## நமது நோக்கு

# இயற்கையும் சீறுகிறது!

அரசியலிலே பரபரப்பான செய்திகள் வந்து நிரம்பிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இயற்கை அன்னையும் சீறிச்சினந்து எமது கவனத்தை தன் பக்கம் இழுத்துள்ளது.

பெருவெள்ளம், மண்சரிவு ஆகிய அனர்த்தங்கள் கேகாலை, இரத்தினபுரி மாவட்ட மக்களைச் சோகக் கண்ணீர் வடிக்கச் செய்துள்ளது.

முப்பத்தாறு மணிநேரத்திற்கு மேலாகத்தொடர்ச்சியான மழை! அதனால் ஏற்பட்டதுபெருவெள்ளம். பலரை உயிர்ப்பலி எடுத்திருக்கிறது; ஆயிரக்கணக்கானோர் வீடிழந்திருக்கிறார்கள்; காயமடைந்திருக்கிறார்கள் பலர். வீடிழந்த மக்கள் பாடசாலைகளிலும், அரச கட்டிடங்களிலும் தஞ்சம்புகுந்திருக்கிறார்கள். அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் விரைவாகச் செயற்பட்டு வருகின்றது, எனச்செய்திகள் வந்துள்ளன.

பிரதம மந்திரியும் ராஜாங்க அமைச்சரும் நேரிற்சென்று, நிலைமைகளை ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.

அவசரகாலவேளைகளில், நிவாரணப்பணி வேலைகளில் அரச ஊழியர்கள் மனிதாபிமான உணர்வோடு செயற்பட வேண்டியது அவசியம். காலந்தாழ்த்தி உதவி செய்வதை விட, உதவிசெய்யாமல் ஒதுங்கி விடுவதே நன்று. இதை உணர்ந்துதான் அரச ஊழியர் கூட்டத்தில் பிரதம மந்திரி உருக்கமான வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

''சட்டத்தை ஒதுக்கி விட்டு உயிருக்காகப் போராடுபவர்களைக் காப்பாற்றுங்கள்!' — இது அவரது அவசர வேண்டுகோள்.

கொட்டும்மழையில் நடுங்கிக்கொண்டிருந்த மக்கள் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மண்சரிவிற் சிக்குண்டு, உயிரிழக்கும் அனுபவம் மிகவும் பயங்கரமானது. பம்பரகல்ல என்ற கிராமமே அழிக்கப்பட்டிருக்கின்றது.

முப்பது ஆண்டு காலத்திற்கு இப்படியான பெருவெள்ளமோ, மண்சரிவோ ஏற்படவில்லை எனச் செய்தியாளர்கள் கூறுகிறார்கள். பூரணமான புள்ளிவிபரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

மீட்புப் பணி, நிவாரணம் அளித்தல், நோய் பரவாது தடுத்தல் ஆகியன உடனடியான செயற்பாடுகள். ஆனால், இவ்வேளையில் நீண்டகாலத் தீர்வுகள்பற்றிக் குறிப்பிடுவதைச் 'சுடலை ஞானம்' எனக் கருத மாட்டார்கள் என நம்புகிறோம்.

மட்டக்களப்பு மாவட்டம் சூறுவளியாற் சின்னாபின்னமாக்கப்பட்ட பின்னர் சூறுவளியை முன்கூட்டியே அறியவும், எச்சரிக்கவும், பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் பல திட்டங்கள் 'சுடலை ஞானத்தில்' எழுந்தன. அரசியற் சூறுவளியால் இத்திட்டங்களும் அள்ளுப்பட்டுப் போயிருக்கும் என்று நம்ப மறுக்கிறோம்.

'சீனாவின் கவலை' எனப் பெயர்பெற்றிருந்த யாங்கிசிக்கியாங் என்ற பேராறு ஆண்டாண்டு காலமாக அவலம்தந்துவந்தது, வெள்ளப் பெருக்கால். செஞ்சீனா உருவாகியபோது அவலத்தை நீக்குவதற்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள்.

மகாவலி போன்ற மாபெரும் திட்டங்கள் வகுத்த அரசாங்கம், பெருவெள்ளம், மண்சரிவு ஆகிய இயற்கைச் சீற்றங்களைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பது எமது வேடுண்கோள்!

# அல்லையம்பதியில் இன்று மகாகும்பாபிஷேகம்

துன்னாலை வடக்கு அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் இன்றுவியாழக்கிழமை காலை ஏழு மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

இவ்வாலயத்தில் இரு சிறப்புக்கள் உண்டு. ஒன்று இங்குள்ள ஷண்முகப்பெருமானின் வாகனமாகிய மயில் இடப்பக்கத்தில் அமைந்துள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்டது உலகில் மூன்று இடங்களில் தான். திருச்செந்தூர், சென்னை நகர் கந்தகோட்டம், அடுத்தது அல்லையம்பதி.

இரண்டாவது சிறப்பு இலங்கையில் முதல்முதலாக மீனாட்சி அம்மன் இங்கு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. இத்தகைய சிறப்புமிக்க இவ் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தைக் கண்டு இன்புற்று, கலியுகவரதனும் கந்தப்பெருமானின் அருள் பெறும் பொருட்டு பரிபாலனசபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து 20 நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் இறுதிநாள் சகஸ்திர சங்காபிஷேகமும், சிறப்புமலர் வெளியீடும் நடைபெறும்.

—ச. செந்துராசா

### பாங்கு பெறப்பெரும் பசிப்பிணி தீர்ப்பாள்

பாம்பின் படைக்கணி பகிர்ந்து படைப்பாள்
பாங்கு பெறப்பல பான்மை புரிவாள்
வேம்பின் நிழற்கெழில் ஊட்டி மகிழ்வாள்
வேண்டும் வரம்பல தந்து நிறைப்பாள்
ஓங்கும் கலைகட் குன்றின் ஒளிர்வாள்
உத்தமி ஆன்ம சித்தம் உடையாள்
பாங்கு பெறப்பெரும் பசிப்பிணி தீர்ப்பாள்
பார்வதி நாக பூஷணி அம்மாள்

நாக. [illegible]

[ *நயினை உற்சவம் இன்று [illegible] ]

## நீராவியடிப் பிள்ளையார்

# தலவரலாறும் இராஜகோபுர மகா கும்பாபிஷேகமும்

யாழ்ப்பாணத்தில் வண்ணைப்பிரதேசம் தெய்வீக மணம் கமழும் சிவபூமியாக திகழ்கிறது. வண்ணை வாழ் சைவப் பெருமக்கள் விநாயகர் வழிபாட்டில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்கள் என்பதை இப்பிரதேசத்தில் காணப்படும். வரலாற்றுப் பெருமையும் அற்புதமும் நிறைந்த பிள்ளையார் ஆலயங்கள் மூலம் உணரக்கூடியதாகவிருக்கிறது. இவற்றுள் வண்ணை கிழக்கில் அமைந்துள்ள நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் மிகப்பழமை வாய்ந்ததும் அற்புதம் நிறைந்ததுமாகும். இத்தலத்திற்கு ஆரம்பத்தில் ஸ்ரீ ஜெயநீராவி விரகத்தி விநாயகர் ஆலயம் என்றே அழைக்கப்பட்டது. அதற்கும் ஒரு வரலாற்றுத் தொடர்புண்டு.

(வரலாற்றுப்புகழ் மிக்க நீராவியடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திவிநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன பஞ்சதள இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறுவதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது)

இற்றைக்கு சுமார் 300 வருடங்களுக்கு முன் ஒல்லாந்தர் காலத்தில் திறைசேரி தலைவராகவிருந்தவரும் வண்ணை கிழக்கில் வசித்தவருமாகிய பூலோக முதலியார் தமது குடும்பத்தினதும் சந்ததியாரினதும் ஆன்ம ஈடேற்றம் கருதி தங்கள் குல தெய்வமாக வீரகத்தி விநாயகரை வேதாரணியத்திலிருந்து கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தார்.

இராம இராவண யுத்தத்தில் இராவணனைக் கொன்ற பிரமஹத்திதோஷம் இராமரைப் பிடித்திருந்தது. இராமபிரான் வேதாரணியம் திருமறைக்காடு ஆலயத்தில் உள்ள வீரகத்தி விநாயகரை வணங்கியதால் இத்தோஷம் நீங்கப்பெற்றார் என்பது வரலாறு. இத்தகைய வரலாற்றுச் சிறப்புக்குரிய வீரகத்தி விநாயகர் ஆலயமே நீராவியடி விநாயகர் என இன்று சிறப்பும் பொலிவும் அமைந்த திருத்தலமாகத்திகழ்கிறது.

18-ம் நூற்றாண்டின் முற்பகுதி முதல் (1805) இங்கு நித்திய நைமித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெறத் தொடங்கின. (யாழ்ப்பாணம் செயலகத்திலுள்ள பதிவு ஏட்டில் இக்கோயில் பூலோக முதலியாரால் ஸ்தாபிக்கப்பட்டது என்றும் 1805-ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனையபெரிய ஆலயங்களுள் ஒன்றாக விளங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது கச்சேரி பதிவு: பக்கம் 10 இலக்கம் 34)

18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் கச்சேரியில்சிருப்பராகஇருந்த ரகுநாதர் காலத்தில் இக்கோயில் கல்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இரகுநாதரது பேரன் சிவகுருநாதரால் தொடரப்பட்ட கற்திருப்பணி வேலைகள் அவரது மைத்துனர் திரு. ஆ. தில்லையம்பலம் அவர்களால் பூர்த்தி செய்யப்பட்டது.

இந்தநூற்றாண்டின்ஆரம்பத்தில் இக் கோயிலிலிருந்து நல்லூர் கந்தன் தீர்த்தத் திருவிழாவுக்கு காவடிகள் பல சென்றபின்பே தீர்த்தத்திருவிழா ஆரம்பமானதாம்.

இத்தலத்தின் பெருமை பற்றி புலவர் பெருமக்கள் பலர் பாடியுள்ளனர். சென்ற நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய இருபாலை சேனாதி ராஜ முதலியார் அவர்கள் கவி வெண்பாக்கள் பாடி இத்தலத்தின் பெருமையை உலகெங்கும் பரப்பியுள்ளார்.

சகல சிறப்புக்களையும் இவ் ஆலயம் கொண்டிருந்தும் இராஜகோபுரம் இங்கு இல்லாதபெரும் குறையா இருந்து வந்தது. விநாயகப்பெருமானின் திருவருளாலும் ஆலய முகாமையாளர் திரு. வைத்திலிங்கம் இரகுநாத முதலியாரின் பெருமுயற்சியினாலும் வானளாவிய ஐந்து நிலை அழகு கோபுரம் அமைந்தது ஆலயத்திற்கு தனிச் சிறப்பே.

திருக்கோயில்கள் அழகானவை, வானளாவிய கோபுரங்களையும், விமானங்களையும், சுற்றுமதில்களையும் நந்தவனங்களையும், தீர்த்தங்களையும், தலவிருட்சங்களையும் கொண்டவை. கோபுரங்கள், திருக்கோயிலின் தூய வடிவமாயின் கோபுர தரிசனம் பாவவிமோசனம் என்றும் கோபுரதரிசனம் கோடி புண்ணியம்என்றும்கருதப்படுகிறது நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கும் வேதாரணியத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அதனால்போலும் இவ்வாலயத்தில் அமைக்கப்பட்ட கோபுரத்தில் காணப்படும் சிற்பக்கலைகளும் அமைப்புகளும் இந்திய சிற்இயலினையொட்டியதாகவிருக்கிறது.

ஆலயத்தை அழகு படுத்திக் கொண்டிருக்கும் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது.

இம்மகா கும்பாபிடேகத்தை பிரதிஷ்டாபூஷணம் சிவாசார்ய சிவ ஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் 15 குருக்கள்மார் நடத்துகின்றனர்.

கும்பாபிடேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

இவ்வாலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் வைத்திலிங்கம் இரகுநாத முதலியார் அவர்களின் தெய்வீகப்பணி பாராட்டத்தக்கது.

**ஐ. தி. சம்பந்தன்**

# நாட்டிலுள்ள 50,000 பிச்சைக்காரர்களை கைதுசெய்யுமாறு உத்தரவு

## சமூக சேவை அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பிச்சை எடுப்பதைநிரந்தரத் தொழிலாகக்கொண்டுஇயங்குபவர்கள் இனிமேல் அவ்வாறு பிச்சை எடுப்பது தடுக்கப்படவுள்ளது. இவ்வாறு பிச்சை எடுப்பவர்களை கைதுசெய்வது தொடர்பான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு சமூக சேவைகள், ராஜாங்க அமைச்சர் திரு. சமந்தா கருணாரத்ன பொலிஸ் பகுதியினருக்கும் சமூகசே''வ உயர் அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார். இதன்படி நாடுமுழுவதுமுள்ள சுமார் 50 ஆயிரம் பிச்சைக்காரர்கள் அடுத்த வாரம்முதல் சமூகசேவைகள் அமைச்சினால் கைது செய்யப்படுவார்கள்.

சமூகசேவைகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்நாடுமுழுவதும் 50 ஆயிரத்துக்கு அதிகமானோர் நிரந்தரமாக பிச்சை எடுப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். கொழும்பில் மட்டும் 10 ஆயிரம் பேர் இருப்பதாக அண்மையில் அமைச்சு நடத்திய கணிப்பீடுகளில் இருந்து தெரியவருகிறது எனத் தெரிவித்தார்.

கொழும்பிலும் நாட்டின் ஏனைய பிரதான நகர்களிலும் உள்ள கடைவீதிகள், பஸ் தரிப்பு நிலையச்களில் இவர்களில் பெரும்பாலானோர் குடும்பமாக வாழ்க்கைநடத்தி வருவதுடன் பிச்சை எடுப்பதையே நிரந்தரத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களில் பலர் பலவித குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த வாரம் தொடக்கம் இக்கைதுநடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன. இவ்வாறு கைது செய்யப்படும் பிச்சைக்காரர்கள் ரிதியகம, கங்கொடவில ஆகிய இடங்களில் உள்ள புனர்வாழ்வு விடுதிகளுக்கு அனுப்பப்படுவார்கள். அங்கு இவர்களது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்வதுடன் தொழிற்பயிச்சி, கல்வி வசதிகளையும் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. இவர்களின் மறுவாழ்வு தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சில் தனியான ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வீடுகள் தேவைப்படும் பட்சத்தில் வீடு கட்டிக்கொள்ள காணி அல்லது வீடுகள் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக வீடமைப்பு தொடர்பான அரச நிறுவனங்களுடன் அமைச்சு பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.

### பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவனான பரமேஸ்வரன் முரளீதரன் கடந்த திங்கட்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டதை கண்டிக்குமுகமாகவும் இனிமேலும் இவ்வாறான நிகழ்ச்சிகள் தொடராமல் இருப்பதற்கும், மாணவர்கள் கைது செய்யப்படுதை எதிர்த்தும் இன்று வியாழக்கிழமையும் நாளையும் யாழ் குடாநாட்டின் சகல அரச, தனியார் பாடசாலைகளையும் தனியார் கல்வி நிறுவனங்களையும் பகிஷ்கரிக்குமாறு கொக்குவில் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி கடந்த இரு தினங்களாக நடைபெறுததும் தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக 27 முத்திரைகள் இவ்வாண்டு வெளியிடப்படும்

(ஸி. துவான் நஸீர்)

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சினால் இவ்வாண்டு புதிதாக வெளியிடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ள முத்திரைகளின் எண்ணிக்கை 27 ஆகும். இதில் 15 புதிய முத்திரைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட புதிய முத்திரைகளின் எண்ணிக்கை 31 ஆகும். இதில் சேர். ராசிக் பரீத், எம். ஜே. எம். லாபீர் ஆகியோரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட முத்திரைகளும் இரண்டும் அடங்கும்.

இவ்வாண்டு திரு. சைமன் காசிச்செட்டியின் ஞாபகார்த்தமாக வெளியிடத் தீர்மானிக்கப்பட்ட முத்திரை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு வெளியிடப்படவுள்ள புதிய ஏனைய முத்திரைகள் பற்றிய விபரம் வருமாறு:

ஜூன் 23ல் (75 சதம்) கம்உதாவ 1989, ஜூலை 1 இல் (ரூ 5.75)—ஆசிய பசுபிக்தொலைதொடர்பு கழகத்தின் 10 வது ஆண்டு நிறைவு. ஜூலை 2ல் (75 சதம்) உடுநுவர ஸ்ரீ சரானந்த தேரர், மற்றும் (75 சதம், ரூபா 1,2,5.75) முதலில் சந்திரனில் மனிதன் இறங்கியமை. (75 சதம்) தலதா மாளிகை கொம்பன் யானை (75 சதம்) இலங்கை பப்டிஸ்ட் கழகம். (ரூ 5.75) பிரான்சிய தேசிய புரட்சியின் 200 ஆண்டுகள் நினைவு (75 சதம் (ரூபா 8-50) தேசிய பாடசாலைகள் விளையாட்டுக்கள் (ரூபா 1) மகாவலி விளையாட்டு (75 சதம்) சேர். சிறில் த. சொய்சா. (75 சதம்) நத்தார் 1989(75சதம்,ரூபா 8.50) அரச இலக்கிய தின (75 சதம்). (து)

# அடுத்த மூன்று வாரங்களில் விண்ணப்பம் கோரப்படும்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்படவுள்ள ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இன்னும் மூன்று வாரங்களுக்குள் கோரப்படவுள்ளன. இதுதொடர்பான விபரங்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

புதிதாக நியமிக்கப்படவுள்ள ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இம்முறை எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றவேண்டிய அவசியம் இல்லை. தகுதியான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைமூலமே தெரிவுசெய்யப்படுவார்கள்.

இத்தகவல்களை கல்விச் சேவைகள் கமிட்டியின் தலைவரும் கல்வி அமைச்சின் பிரதம ஆலோசகருமான திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார்.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான வயது எல்லை 28-ல் இருந்து 35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய நியமனங்களின்போது சமயம் நுண்கலை, கலை, விஞ்ஞானம் முதலிய 10 வகையான ஆசிரிகர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. தகுதியான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைகளின் பின்பே தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்களின் பெயர்களும் அவர்களது நியமனம் தொடர்பான விபரங்களும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளிலும், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் அலுவலகளிலும், கல்விக்காரியாலயங்களிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும். இதனால் இந்திய

(7-ம் பக்கம் பார்க்க)


## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி இ. தேவாமிர்தம் அம்மையார்

மண்ணில்: 1928-02-28

விண்ணில்: 1988-05-20

சாவுகள் சாதாரண மாகிவிட்ட
இம் மண்ணை
மாற்றவும் முடியாமல்
நாம் மாறவும் தெரியாமல்
கலங்கித் தவிக்கையில்.........
உங்கள் மரணம் எம்மை
நிலைகுலைய வைக்கிறதே
சோகச் சூழ்நிலையில்
உங்களை எம்மனதில் சுமந்து
வாழ்க்கைப் பயணத்தை
துயருடன் தொடர்கிறோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள், பேர்த்திகள்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.
1989-06-08.

(சி-2904)


# யோகம் பிராணயாமம்

## பத்மாசனம்

முதலாவது பத்மாசனம் இதைச் செய்யும் விதம் சமமான தரையில் நீளமான விரிப்பை விரித்து அதில் இருந்து கால்களை நீட்டி வலது காலை மடக்கி இடது தொடையின் மேல் குதிக்கால் அடிவயிற்றில்பட வைக்க வேண்டும். இரண்டாவது இடது காலை மடக்கி வலது தொடையின் மேல் வைத்து நிமிர்ந்து அழகாக இருத்தல் வேண்டும்.

கண்களை மூடி தியானத்தில் இருக்கும்போது நெற்றிப்புருவ மத்தியை மனக்கண்ணால் பார்த்து மனதை அடக்கி வேறெங்கும் செல்லாமல் பாதுகாக்க வேண்டும். ஆசனம் செல்லும்போது மூச்சை உள்ளிழுக்கும் போது ஓம் என்றும் வெளியில் சுவாசம் விடும்போது ஒன்று என்றும் கணக்குப்போட்டு நிமிடம் பதினைந்து, எண்ண வேண்டும். இப்படி பத்மாசனம் ஒரு நிமிடம் முதல் ஐந்து நிமிடம் வரை இருக்கலாம பத்து நிமிடம் வரையிலேனும் இருக்கலாம்.

## பத்மாசனத்தின் நன்மைகள்

சுவாசப்பையை நேராக இருக்க வைக்கிறது. அதிகமான பிராண வாயுவை உள்ளே இருக்க இடம் எடுக்கிறது. முதுகு எலும்புகள் வலுப்பெறுகின்றன. இரத்த நரம்புகள் துரிதமாக வேலை செய்கின்றன. நல்ல ஞாபக சக்தியையும் ஏற்படுத்துகிறது.

முதுகு எலும்புக்குள் இருக்கும் வெள்ளை நரம்பு வலுவடைகிறது. ஆயுளைக் கூட்டுகிறது.

— ஸ்ரீ சிதானந்தயோகி

# இராசி பலன்

**08-06-1989**

பஞ்சமி இரவு 8.19 வரை, பூசம் காலை 6.16 வரை, அமிர்த சித்தயோகம். ராகு காலம் 1.2_ – 2-56 வரை. சுப கருமங்களுக்கு நன்று.

மேஷம்: பயணங்களால் செலவு, நண்பர்கள் விரோதம், அதிகயோசனை, குடும்பப்பகை, வாக்குவன்மை.

இடபம்: சிறுபிணி, குடும்பத்தில் துன்பம், எதிரிகள் பயமுறுத்தல், அதிகாரிகள் சீற்றம், கவலை.

மிதுனம்: எண்ணங்கள் ஈடேறும், தூரதேச பயணம், மனை மகிழ்ச்சி, சகோதரர் உதவி, பாராட்டு.

கடகம்; பணமுடை, பயனற்ற பிரயாசம், தொழில் நஷ்டம், இனசனவிரோதம், மனச்சுமை.

சிங்கம்: முத்தான சந்திப்பு, தொழில் வாய்ப்பு, அதிகபிரசங்கம், மனமாற்றம், சந்தோஷம்.

கன்னி: பயணத்தடை, குழப்பமடைதல், மக்களால் கவலை, வீட்டுக்கஷ்டம்.

துலாம்; சுபகாரியம், கடித உறவு, கடன் வசூல், புதிய முதலீடு, குதூகலம்.

விருச்சிகம்; தொழில் வெற்றி, பந்தயம், கடினவாக்கு, மனைவியால்பாராட்டு, ஆலயதரிசனம்.

தனுசு; வீண்சண்டை, தொழில் கேடு, அந்நியவாசம், அதிகசெலவு, உடல்பாதிப்பு.

மகரம்: விசனமடைதல், விபரீதபோக்கு, குடும்பசுகமின்மை, அலைச்சல், போட்டி.

கும்பம்: நீண்டநாள் பிரச்சனை தீரும், பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, காதல் உறவு, புகழ்.

[illegible]
முடிவெடுத்தல், நண்பருதவி, வெற்றி.

நயினை உற்சவம்:

# பாதுகாப்பு நடவடிக்கையில் இந்திய அமைதிப்படை

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் உற்சவகால பாதுகாப்பு ஒழுங்குகளை நேற்றுமுதல் இந்திய அமைதிப் படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆலய வருடாந்த வைபவம் ஆரம்பமானபோது இலங்கைக்கடற்படையினரே இறங்கு துறையில் சோதனையி லீடுபட்டிருந்தனர்.

கடந்த வருடம் போலவே இம்முறையும் இந்தியப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உற்சவத்திற்குவரும் பக்தர்களுக்கு உதவும் பொருட்டு செம். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குறிகாட்டுவான், நயினாதீவு இறங்குதுறைகளில் பக்தர்களுக்கு உதவுவதோடு படகுகளில் மேலதிகமாகப் பக்தர்களை ஏற்றிச் செல்வதைத் தடுக்கும்வகையில் இத்தொண்டர்கள் கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபடுவர் என செம். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடமாகாணத் தலைவர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார்.

# பரு. சாரதா ஆசிரமத்திற்கு தென்னந்தோட்டம் அன்பளிப்பு

(வடமராட்சி)

விம்பிள்டன் கணபதி ஆலயம், நாற்பத்தைந்து ஏக்கர் தென்னந்தோட்டத்தை சுவாமி சித்ரூபவானந்தா பொறுப்பிலுள்ள பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு அன்பளிப்புச்செய்துள்ளது.

விம்பிள்டன் கணபதி ஆலய நிர்வாகி திரு. ஏ. ரி. எஸ். இரத்தினசிங்கம் மேற்படி ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

மேற்படி தோட்டத்தில், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒரு இல்லம் அமைத்துக்கொடுப்பதோடு அதன் சகல பணிகளுக்கும் நிதிவழங்கப்படும் என்றும் சுவாமி சித்ரூபவானந்தாவுக்கு திரு. இரத்தினசிங்கம் கடிதமூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

## விவேகானந்தர் நூல் அன்பளிப்பு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு விவேகானந்தரின் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் சுவாமி விவேகானந்தரின் 120வது பிறந்த நாள் கல்லூரியில் கொண்டாடப்பட்டபோது பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாசிரமத்தின் சார்பில் சுவாமி சித்ரூபவானந்தா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சுவாமி விவேகானந்தரின் 10 தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கினர்.

# தமிழ்ச் சுருக்கெழுத்து தந்தையின் சேவைக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பல்லாண்டுகளாகத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தட்டெழுத்துத் துறையை வளர்த்து, அத்துறையில் ஒரு சகாப்தத்தை ஏற்படுத்தி, தன் புருடத்துவத்தினாலும், தன்னலமற்ற சேவையினாலும் தனக்கென ஒரு மாணவர் பரம்பரையைக் கொண்டுதிகழ்ந்து, கடந்த மாதம் 13-ம் திகதி சிவபதமடைந்த தமிழ்ச் சுருக்கெழுத்து தந்தை திரு. சி. இராமலிங்கம் அவர்களின் ஆத்மசாந்திக்காக யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தமிழ்ச் சுருக்கெழுத்துத் தட்டெழுத்து ஆசிரியர்களின் கருத்தரங்கில் மௌனஞ்சலி அனுட்டிக்கப்பட்டதுடன், இப்பேரிழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினர்களுக்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்ச் சுருக்கெழுத்து ஆசிரிய ஆலோசகர் செல்வி நா. வேலுப்பிள்ளை தலைமை உரையாற்றுகையில், சுருக்கெழுத்துத் தட்டெழுத்தைக் கற்பிப்பதில் அவருக்கே தனியுரித்தான அவரது சிறப்பாற்றலையும், அயராத உழைப்பையும், மாணவர் மத்தியில் அவருக்கிருந்த பெருமதிப்பையும்

(7-ம் பக்கம் பார்க்க)


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
யோகேஸ்வரி
மாணிக்கம்

தோற்றம்: 11-06-1920

மறைவு: 04-06-1984

திதி: 08-06-1989

எங்கள் ஒளி விளக்காக விளங்கி
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
எம்மையெல்லாம் வழி நடத்திய
அன்புத் தெய்வமே
தங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரி, பேரப்பிள்ளைகள்.

இல. 11, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 2907)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மினி பஸ்நிலையம் இடம்மாறுகிறது

(சுண்டுக்குளி)

யாழ். மினி பஸ் நிலையம் சிங்கள மகாவித்தியாலயம் இருந்த காணியில் அமைய விருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போது யாழ். பஸ் நிலையம் முன்பாக தரித்து நிற்கும் மினி பஸ்கள் இனிமேல் ஆஸ்பத்திரி வீதியில், முன்னர் சிங்கள மகாவித்தியாலயம் அமைந்திருந்த காணியில் புதிதாக அமையப்போகும் தரிப்பிடத்திலேயே நிறுத்தப்படுமெனக் கூறப்படுகிறது.

மேற்படி காணி, நேற்று 'புல்டோசர்' மூலம் துப்பரவு செய்யப்பட்டதைக்காண முடிந்தது.

## யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் நஷ்டஈடு
# மூன்று மாதங்களுக்குள் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1987-ம் ஆண்டு அக்டோபர் மாதம் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது பலியான 63 ஊழியர்களினதும் குடும்பங்களிற்கு நஷ்டஈடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக கடந்த வாரம் பிரதிநிதிகள் குழு ஒன்று சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தை சந்தித்தபோதே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பலியானவர்களின் குடும்பங்களுக்கான நஷ்டஈட்டை அடுத்தமூன்றுமாதங்களுக்குள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார்.

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் காலியாகவுள்ள தொழிலாளர் பதவிகளை நிரப்ப நேற்றும் நேற்றுமுன்தினமும்நடைபெற இருந்த நேர்முகப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது.

புரிந்து ஓய்வு பெற்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்ததே நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்புக்கு காரணம் எனத் தெரியவருகிறது.

## மன்னாரில் 138 கி. சே. அலுவலர்

(மன்னார்)

பயிர்ச் செய்கை அலுவலர்கள், விவசாய சேவை உத்தியோகத்தர்கள் அனைவரும் பதவி மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக இப்பொழுது மன்னாரில் 138 கிராம சேவை அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர்.

இருநூறு குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவை அலுவலர் பிரிவு என்ற ரீதியில் கடமையாற்றுகின்றனர்.

## ஊனமுற்றோருக்கு உதவி

(மன்னார்)

அண்மைக்காலத்தில் இடம் பெற்ற வன்செயல்களின் போது கால் கைகளை இழந்தவர்களுக்கு மன்னார் அரச அதிபர் இலவசமாக முச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளார்.

தொண்டர் ஸ்தாபனங்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த முச்சக்கர வண்டிகளை அரசஅதிபர் தத்தம் பிரிவு உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சின் பேரில் விநியோகம் செய்தார்.

# மீண்டும் தேர்தல் நடத்த சுதந்திரக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்றப் பொதுத்தேர்தலையும் மீண்டும் நடத்த வேண்டுமென்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திரக்கட்சி நிர்வாக சபைக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருமதிசிறிமாவோபண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மேற்படி இரு தேர்தல்களும் முறையற்ற விதத்தில் நடந்ததென்றும், மக்கள் பூரணமாக

(7ம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு
## புதிய கட்டுப்பாடுகள் வருகிறது

(கொழும்பு)

மத்தியகிழக்கிற்கும், மேற்கு ஆசிய நாடுகளுக்கும் வேலை தேடிச் செல்பவர்கள் தன்னிச்சைப்படியாக இனிமேல்செல்ல முடியாது. இதற்கான புதிய விதிமுறைகளும், சட்ட திருத்தங்களும் வரவுள்ளன.

தற்போது பதிவுசெய்யப்படாத வேலைவாய்ப்பு முகவர்களுடாக வெளிநாடுகளுக்கு வேலைபெற்றுச் செலலும் ஆண்களும், பெண்களும் பல பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாகத் தொழில் அமைச்சுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துவருவதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனத் தொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இனமேல் மத்தியகிழக்கு நாடுகளுக்கும் மேற்காசியநாடுகளுக்கும் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்பவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டியிருப்பதுடன் அங்கு அவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தி அரச முத்திரையும் அவர்களதுபாஸ்போர்ட்டில் பதியப்பட்டிருந்தால் மட்டுமே வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

இதற்கு ஏற்றவிதமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகச் சட்டம் திருத்தப்படவுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்பவர்கள் நிறைவேற்றவேண்டியுள்ள சட்ட ஒழுங்கு விதிகள், நடைமுறைகள் யாவும் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதைக் கண்காணிப்பதற்கெனக் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் இதற்காகத் தனியான ஒருபிரிவும் நிறுவப்படுமெனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (து)

## வெளிவாரி பட்டதாரிகளுக்கும்
# ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்போது மேலும் பல வெளிவாரிப்பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம் பெறவுள்ளனர். வெளிவாரி பட்டதாரி ஆசிரியர்களாக மேலும் பலரை நியமிப்பதற்கு கல்விஅமைச்சுஎடுத்த தீர்மானத்துக்கு இணங்கஇந்த நியமனங்கள் வழங்கப்படும்.

வெளிவாரி பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதென அமைச்சு எடுத்த தீர்மானத்துக்கு இணங்க இதுவரை 3662 பேருக்கு இவ்வருடம் தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

மேலும் எத்தனைவெளிவாரி பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்பது பற்றியும் அவர்களின் விபரங்களை பெறுவது பற்றியும் கல்விச் சேவை கமிட்டித் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் விபரங்களைக் கோரியுள்ளார். (து)


# ஓராண்டு நினைவு அஞ்சலி

அமரர்
## பிரம்மஸ்ரீ ப. சுப்ரமண்ய ஐயர் (P.S. ஐயர்) அவர்கள்

[இளைப்பாறிய புகையிரதப்பகுதி காணி உத்தியோகத்தரும், நில அளவையாளரும், யாழ். சிவானந்த குருகுல நிர்வாகஸ்தரும், வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபை உறுப்பினரும்]



ஜனனம்: 31 - 8 - 1922
மரணம்: 8 - 6 - 1988
ஆண்டுத் திதி: அபரபக்ஷ நவமி (29 - 5 - 89)

அன்பின் திருவுருவே!
அமைதியின் பிறப்பிடமே!
அறிவுச் சுடரே!
ஆளுமையில் அருந்திறலே!
ஆருயிர்த் தெய்வமே!
இதயமெல்லாம் நிறைந்தவரே!
இலட்சியமாய் வாழ்ந்தவரே!
இல்லத்தின் தலைவனே!



உங்களுடலைச் செந்தணல் தாங்காதென்றே
உம்மவர் நெஞ்சங்களில் அனல்தனை வளர்த்திர்
உலகுருண்டு நாட்கள் தானோடும்
எம்நெஞ்சில் உம்நினைவுகள் ஓடாநிலைக்கும்
என்னே! காலமலர் வருட இதழொன்றை உதிர்த்தும் விட்டதே
எத்தனை இதழ்களுதிர்த்தும் எம்மனதில் பாசமலர் படருதே
ஐயா! என்று வந்த மக்கள்தம் நிலமதை அளந்திர்
ஒவ்வொரு அன்பர்தம் உள்ளமதை அளந்திரே
ஒருகாலும் இலையுதிர்காலம் வராதுஉம் நினைவெனும்
ஒப்பற்ற மலரதனை உதிர்க்கவும் மாட்டா
ஓராயிரம் உம் நினைவில் உமதடி பணிவமே
ஓ! உம் பாதாரவிந்தங்கள் எமை வழிகாட்டட்டும்
மாளாத் துயர்தந்து மீளாத்துயில் கொள்ளும் மன்னே
எம் கண்ணீர் பாய்ந்துவந்து உம்துயிலைக் குழப்பாதோ!

65, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி 2910)

பாசமுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் பொருளாதார நடவடிக்கை பணவீக்கத்தை அதிகரித்துள்ளது

## இலங்கை மத்திய வங்கி அறிக்கை

(நமது நிருபர் துவான் நஸீர்)

இலங்கையின் பணவீக்க நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் பணவீக்கத்தை மேலும் அதிகரிப்பதற்கே உதவியுள்ளன.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டறிக்கையில் காணப்படும் தரவுகள் விபரங்கள் இதனைத் தெளிவுபடுத்துவதாக உள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் 1988ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் பிரகாரம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றங்களினால் அளவிடப்பட்ட பணவீக்க வீதம் முன்னைய ஆண்டின் வீதத்தினைவிட இருமடங்காக அதிகரித்துள்ளது. 1988ம் ஆண்டின் பணவீக்கப் போக்குகள் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. 1985–87 காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் சராசரி அதிகரிப்பு வீதம் ஒற்றை எண் மட்டத்திலேயே விளங்கி மிதபான பணவீக்கத்தாக்கங்களைக் காட்டியிருந்தன.

இந்தப் பின்னணியில் 1988ம் ஆண்டில் இரட்டை எண்ணுக்கு பணவீக்கம் அதிகரித்தமை கவலைக்குரிய விடயமாகுமென இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் வரவுசெலவுத்திட்ட நோக்கங்களுக்காக அரசாங்கம் தொடர்ச்சியாக வங்கிக் கொடுகடனை நாடுவது குறிப்பிடத்தக்க கவலைக்குரியவிடயமாக இருக்கிறதெனவும் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பற்றுக்குறையான வரவுசெலவுத்திட்டங்களுக்கு நிதியீட்டம் செய்யப்படவேண்டுமென உலகப் பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்தும்விடயத்துக்கு மாறாக கடந்த பல ஆண்டுகளாக பணவீககத்தை மேலும் அதிகரிக்கக்கூடிய வங்கிக் கொடுகடனைக் கொண்டு அரசினால் நிதியீட்டங்கள் செய்யப்பட்டுள்ளன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக நோக்கும்போது 1987ல் 11 . 1 வீதமாக இருந்த மொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றுக்குறை 1988ல் 15 . 2 வீதமாக அதிகரித்துள்ளது. இப்பற்றுக் குறைகளுக்கான வங்கித் தொழில்முறையிலிருந்துதான் கடன்பாடுகள் 1988ல் 1 . 8 வீதத்திலிருந்து 4 . 1 வீதமாக உயர்வடைந்துள்ளது. இதன் விளைவுகளாக சென்மதி நிலுவை நிலைமைகள் மோசமடைந்துள்ளதுடன் பணவீக்கத் தாக்கங்கள் மேலும் தீவிரமடைந்துள்ளன.

வங்கிக் கொடுகடனை நாடுவதற்கு இலங்கை அரசாங்கத்தின் அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி ஒரு காரணமாக இருக்கும். அதே நேரம் நாட்டின் பாதுகாப்பு (சம்பளம்) ஆகியவற்றில் ஏற்பட்ட செலவீட்டு அதிகரிப்புக்களும் ஒரு காரணமென்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் பணநிரம்பலில் ஏற்பட்ட மிகையான வளர்ச்சியும், விலைமட்டங்களின் மீதான தொடர்ச்சியான அதிகரிப்பும் பணவீக்கத்தை அதிகரித்துள்ளன. உதாரணமாக 1988-ம் ஆண்டில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1987-ம் ஆண்டைவிட 14 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் இதே மாதிரியான விரிவான விலைத்தாக்கத்தைக் காட்டியுள்ளது.

கடந்தகாலங்களில் காணப்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களும், அதனால் ஏற்பட்ட வழங்கல் குறைபாடுகளும், வரட்சியின் காலம் கடந்த தாக்கம், மின்சாரத்தின் மீதான உயர்கட்டணம், புகையிலை, மதுபானம் மீதான கலால்வரி திருத்தப்பட்டமை போன்ற காரணிகளும் விலைமட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தி பண வீக்கத்தை அதிகரிக்க உதவியுள்ளன எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்வி வட்டார மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நாளை வெள்ளிக்கிழமை யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி வட்டாரத்தில் கற்பிக்கும் மனைப் பொருளியல் ஆசிரியர்கள் சகலரும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வர் என ஆசிரிய ஆலோசகர் திருமதி குணராணி திருஞானசம்பந்தன் கூறினார்.

### அதிகரிப்பு

[மன்னார்]

மன்னாரில் தற்போது உல்லாசப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

### மீண்டும் தேர்தல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென்றும், இதன் காரணமாக மீண்டும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

### தமிழ்ச் சுருக்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

திரு. சி. இராமலிங்கம் நினைவாக மலர் ஒன்று வெளியிடுவதற்காக வர்த்தகமும் கணக்கியலும் பாட ஆசிரிய ஆலோசகர் திரு. வ. க. பாலசுப்பிரமணியம் தலைமையில் ஒரு 'மலர்க்குழுவும்' தெரிவு செய்யப்பட்டது.

### அடுத்த மூன்று

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மனங்கள் தொடர்பான விமர்சனங்களையும், கருத்துக்களையும் பொதுமக்களிடம் பெற முடிவதுடன், நியமனங்கள் தொடர்பான ஊழல்கள். சிக்கல்களைத் தவிர்க்கக்கூடியதாக இருக்குமென அவர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரிகளுக்குப் புள்ளிகள் வழங்கும்போது சமய அறிவு, சமயம் கற்பித்தல், சாரணீய பயிற்சி, கடேற் பயிற்சி முதலிய துறைகளில் அனுபவமும், பயிற்சியும் உள்ளவர்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து)


நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
THE POLICE ANGELS
விரைவில்!!
ரஜனி நடித்த
கொடி பறக்குது

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
வெற்றிகரமாகக் காட்சியளிக்கிறது!
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்–பிரபு
நதியா–சுதாசந்திரன்
விஜயன் நடித்த
சின்னத்தம்பி பெரியதம்பி


### செயல் திட்டங்களில் கற்பிக்க
## ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

முதியோர் கல்வி பயிற்சி வகுப்புக்கள் போன்ற ஆங்கிலம் கற்பிக்கும் செயல் திட்டங்களில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும், அரசாங்க அலுவலர்களையும் வேலைக்கமர்த்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது இதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயது வந்தோருக்காக கற்பிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளிலும் ஏனைய செயற்றிட்டங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களாக பணியாற்ற விரும்பும் ஆர்வமுள்ளவர்கள் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இம்மாதம் 16-ம் திகதிக்கு முன்னர் பிரதேச கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பாதிக்கப்பட்ட சனசமூக நிலைய விபரம் சேகரிப்பு

(வண்ணார்பண்ணை)

நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாதிப்புக்குள்ளான சனசமூக நிலையங்கள் தமது பாதிப்புக்கள்பற்றிய விபரங்களை உடன் தமக்கு அனுப்பிவைக்குமாறு நல்லூர்ப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் சுற்றுநிருபம்மூலம் கோரியிருக்கின்றார்.

பாதிப்புக்குள்ளான சனசமூக நிலையங்கள் பாதிப்பு விபரங்களை ஆதாரத்துடன் இம்மாத இறுதிக்குள் தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடந்தகால அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் இயங்கமுடியாத நிலையில் இருப்பதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு ஏற்கனவே பல புகார்கள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டிக்கு சென். பிரான்சிஸ் சேவியர் செமினறியின் அதிபர் வண. டாக்டர் எஸ். ஜே. இம்மனுவல் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (வி)

### விளையாட்டுப் போட்டி

[உடுவில்]

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 16-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

மருதனாமட'' கோட்டக் கல்வி அதிகாரி திரு. க. குலசேகரம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

## பயிற்சி முடிந்தும் பதவி கிடைக்காதவர்களுக்கு...

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆசிரியர் கல்வி முன் சேவைப் பயிற்சியில் கலந்து கொண்டு இதுவரையும் நியமனம் கிடைக்காதவர்கள் யாழ். கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### ஆழியவளையில்
## வைத்தியசாலை கட்ட விரைவில் நடவடிக்கை

(வடமராட்சி)

ஆழியவளை உடுத்துறைப் பகுதிகளில் கிராமியவைத்தியசாலை கட்டுவதற்கு ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

மேற்படி வைத்தியசாலை கட்டுவதற்கு பொதுமக்கள் நிலம் அன்பளிப்புச் செய்ய முன்வந்தால் கூடியவிரைவில் வைத்தியசாலை உருவாகும் வாய்ப்பு ஏற்படுமென்று வைத்திய அதிகாரி திரு. க. லலிதகுமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்தியசாலைகளுக்கான சகல ஒழுங்குகளும் நடைபெற்றும் வைத்தியசாலை கட்டுவதற்கு வேண்டிய நிலமின்மையே தாமதத்துக்குக் காரணமென்றும் தெரிவித்துள்ளார்.

### முறைசாராக் கல்வித் திட்டத்தில்
## விவசாய விஞ்ஞான பாடம் புதிதாக அறிமுகம்

(உடுவில்)

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் விவசாய விஞ்ஞான பாடம் புதிதாக அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சிக்கான வகுப்பறையினை மருதனாமடம் கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் திறந்துவைத்தார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி எஸ். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள தொழில் நுட்பப்பாடக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம், வெளிக்கள உத்தியோகத்தர்களான திரு. எஸ். பாலகிஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விவசாய விஞ்ஞான பாடப் பயிற்சி நெறி ஆரம்பித்தமையை நினைவுகூரும் வகையில் பாடசாலை வளவில் மரம் நாட்டு விழாவும் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினர் இப்பயிற்சிக்கென லான்ட் மாஸ்டர் உழவுயந்திரம் உட்படப் பல விவசாயக் கருவிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

எற்கனவே இராமநாதன் கல்லூரியில் திருமதி ப. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றுவரும் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிநெறியில் செயல்முறையான விளக்கம் திட்டமிட்டு செய்து காண்பிக்கப்பட்டது.

பெற்றோர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அதிக அளவில் இவ்விழாவில் பங்குபற்றினர்.

இராமநாதன் கல்லூரி உப அதிபர் திருமதி அங்கயற்கரசி சிவப்பிரகாசபிள்ளை வரபுரை நிகழ்த்தினர். கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம், தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம், வெளிக்கள உத்தியோகத்தர்கள் திரு. எஸ். சி. சிதம்பரநாதன், திரு. எஸ். பாலகிருஷ்ணன், சட்டத்தரணி திரு. ஆர். என். சிவப்பிரகாசம், உட்படப் பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணையம்பதி ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. மண்டலாபிஷேகம் 9ம் திகதி தொடக்கம் நடைபெற்று சங்காபிஷேகத்துடன் நிறைவுபெறும்.

### பிரதம ஆலோசகர்

(கொழும்பு)

நாடுமுழுவதுமுள்ள சிறு பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள், ஆசிரியர்கள் நியமனங்கள், இடமாற்றங்கள், தேவைகள் மற்றும் பாடசாலைகளின் பகல் உணவு. விளையாட்டுத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் முதலியன தொடர்பான பிரதம ஆலோசகராக கல்விச்சேவைகள் கமிட்டித் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜே. வி. பி. பயமுறுத்தல்:

# தமிழ்த் திரைப்பட வெளியீடு ஒத்திவைக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு ஜே. வி. பி. கோரிக்கை விடுத்திருப்பதைத் தொடர்ந்து நாளை திரையிடப்படவிருந்த திரைப்படம் ஒன்று பிற்போடப்பட்டுள்ளது.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனமே இது தொடர்பான அறிவித்தலைத் தியேட்டர்களுக்கு விடுத்துள்ளது.

''கொடி பறக்குது'' என்ற தென்னிந்தியத் திரைப்படம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நாளை திரையிடப்படவிருந்தது.

## திடீர்மயக்கமுற்ற இளம்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

திடீரென மயக்கமுற்ற இளம்பெண் ஒருவர் மரணமானர்.

புங்குடுதீவைச் சேர்ந்த குமரேசு சிறீஜெயகுமாரி என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

மயக்கமுற்றதையடுத்து யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட இவர் ஆஸ்பத்திரிக்கு வந்ததும் அங்குமரணமானர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (கு)

## நுணுவில் வழமைக்கு திரும்பியது

[யாழ்ப்பாணம்]

இரு நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கை முடிவடைந்ததைத் தொடர்ந்து மட்டுவில், நுணுவில் பகுதிகள் நேற்று வழமைக்குத் திரும்பின.

இத்தேடுதல் நடவடிக்கையினுல் தடைசெய்யப்பட்டிருந்த கைதடி-நாவற்குழி வீதித் தடைகள் நேற்று அகற்றப்பட்டன.

## நேற்றும் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி நேற்றும், நேற்று முன்தினமும் இயங்கவில்லை.

இதேவேளை யாழ். நகரப் பாடசாலைகளிலும் நேற்று மாணவர் வரவு குறைவாகக் காணப்பட்டது.

சொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் பரமேஸ்வரன் முரளீதரன் கடந்த திங்கட்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

## விளையாட்டுப் போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்-கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி, தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். கோட்டக் கல்வியதிகாரி திரு. சி. தியாகராசா தெரிவித்தார்.

இன்றும் நாளையும் நடைபெறவிருந்த இப்போட்டிகள் இம்மாதம் 12,13ந் திகதிகளில் நிகழவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணக் கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த பாடசாலைகள், இக்கோட்டப் போட்டியில் பங்குகொள்கின்றன.

## கிராமசேவையாளர் அரசாங்க அதிபர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராம சேவையாளர்கள் சங்கப்பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று யாழ். பதில் அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது குறைபாடுகளை விளக்கிக் கூறியது.

தமது தொழில் நெருக்கடி நிலை பற்றி இச்சந்திப்பில் அவர்கள் விளக்கிக் கூறுயதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசம்பு - சேதுப்பிள்ளை

(நயினதீவு)

நயினதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா அமரர் ஆறுமுகம் சிவசம்பு அவர்களின் பாரியார் சேதுப்பிள்ளை அவர்கள் 07-06-89 புதன் கிழமை சிவபதமடைந்தார். இவர் பாக்கியலெட்சுமி, நடராசா (பத்திரிகை விற்பனை நிலையம் யாழ்ப்பாணம்), பரமசாமி (வர்த்தகர் தர்சினி ஸ்ரோர்பெரிய கடை யாழ்ப்பாணம்), பத்மநாதன் (அன்பில்ட் ஸ்ரேட் டிக்கோயா), பழனிவேலு (பிரபல வர்த்தகர் பெரிய கடை யாழ்ப்பாணம்), குணரெத்தினம் (விளையாட்டுத்துறை அதிகாரி மாவட்ட அமைச்சு) சோதிஸ்வரி ஆகியோரின் தயாரும், காலஞ்சென்ற கோபால பிள்ளை, மாசிலாமணி, லீலாவதி, சிவபாக்கியம், புவனேஸ்வரி, ஜெயலெட்சுமி, சிவஞானரெத்தினம் (ஆசிரிபை கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், காசிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் அன்னம்மா, காலஞ்சென்ற வயிரிப்பிள்ளை, சதாசிவம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். ஈமைக்கிரிகைகள் 10-6-89 சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு நயினதீவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்:

ஆ. சி. நடராசாவும், சகோதரர்களும்.

(சி-2813)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registeied as a News Paper atthe Genenral Post Office Sr iLanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

### பாராளுமன்றம் செல்வதா? இல்லையா?

# கேள்விக்கே இடமில்லை என்கிறார் ஈரோஸ் பாலகுமார்

(யாழ்ப்பாணம்)

''சிறைக் கைதிகளை விடுதலை செய்யுமாறு நாம் கோரினேம். நாம் சமர்ப்பித்த கோரிக்கைகளுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது அவ்வளவு பெரிதான ஒன்றல்ல, ஆனுல் அப்படிப்பட்ட ஒன்றையே நிறைவேற்றமுடியாத நிலையில் அரசு இருக்கும்போது நாம் பாராளுமன்றம் செல்வதா? இல்லையா? என்ற கேள்விக்கே இடமேது?''

இவ்வாறு ஈரோஸ் அமைப்பின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் திரு. வி. பாலகுமாரின் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஈரோஸ் உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்வதற்குரிய கடைசி நாள் நாளை 9ம் திகதியாகும். இந்தத் திகதிக்கும் அவர்கள் பாராளுமன்றம் போகத்தவறினுல், தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்தவர்களாவர். புதிய உறுப்பினர்களைப் பின்பு நியமிக்கவேண்டி ஏற்படும். இது பற்றி திரு. வி. பாலகுமாரிடம் 'ஈழநாடு' கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

''தேர்தலுக்குப் பெயர் பட்டியல் சமர்ப்பித்தபோது தேசிய ரீதியாகவும் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட ரீதியாகவும் பெயர்கள் கொடுக்கப்பட்டன. இந்நிலையில் சில உறுப்பினர்களின் காலம் முடிவடைந்தாலும் இரண்டு பட்டியலிலும் இடம் பெற்றவர்கள் பின்பு உறுப்பினர்களாவார்கள். இப்படியே எல்லோரதும் காலம் முறைப்படியே முற்ருக முடிவடைந்துபோக நீண்டகாலம் எடுக்கும். இதனுடன் கிழக்கு மாகாணத்துப் பட்டியலைப் பொறுத்தவரை அவை தேசிய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் முடிவடைய இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலமும் முடிந்துபோகலாம்.

இவ்வாறு தெரிவித்த திரு. வி. பாலகுமார்: ''எமக்குஇதுவரை உத்தியோகபூர்வமாகத் தேர்தல் ஆணையாளரிடமிருந்தோ பாராளுமன்றத் விவகாரத்துக்குரியவர்களிடமிருந்தோ எதுவித அறிவித்தலும் 'கிடைக்கவில்லையென்று விளக்கினர்.

## ஜனதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அவர் நேற்று முன்தினம் ஐ. தே. கட்சி செயல் கமிட்டிக் கூட்டத்தில் வெளியிட்டார். கூட்டத்தில் இந்திய அமைதிப்படை பற்றியும் ஜனதிபதி பிரஸ்தாபித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜனதிபதி அனுப்பவுள்ள புதிய கடிதத்தில் நேற்று நாடு திரும்பிய திரு. பேர்னுட் திலகரட்ணவின் பதில் அறிக்கை தொடர்பாகவும் குறிப்பிடப்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். பல்கலைக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தம் கைவிடப்பட்டதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக ஊழியர் பிரச்னைபற்றி விசாரணை செய்யும்போது ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் இருவர் பங்குபற்றுவதுடன் சம்பள உயர்வு உட்பட தமது பதினேழு கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் பென்சன் விடயத்திற்கு மட்டும் ஒரு வருட கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சங்கத்தினர் தெரிவித்தார்கள்.

## மதிய உணவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''மதிய உணவுத் திட்டத்தின் பெயரால் பாடசாலைகளில் பணிஸ், பாண் என்பன வழங்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும். நல்ல தரமான சத்துணவு மாணவர்களுக்கு வழங்கவேண்டும்.

''உணவிற்குப் பதிலாகப் பணம் வழங்கும் திட்டம்பற்றி வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்து சில பாடசாலைகள் உணவுத் திட்டத்தை நிறுத்திவிட்டதாக அறிகிறேம். அப்படி நிறுத்தப்பட்டிருந்தால் உடனடியாக மதிய உணவு வழங்க நடவடிக்கை எடுக்கவும். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்துவது சிரமம் என்பதால் இத்தொகைக்குக் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் கட்டாயமாக இதனை நடைமுறைப்படுத்தவேண்டும்.

# கடத்தப்பட்டவர் சடலமாகக் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்ட ஒருவர் நேற்றுக்காலை சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், புதியசோனகத்தெருவைச் சேர்ந்த மஃறுதீன் ஜானைடீன் (வயது 26) எனும் ஆட்டிறைச்சி வியாபாரியே இவ்வாறு சடலமாகக் காணப்பட்டவராவர்.

நேற்று முன்தினம் பகல் இவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது டாக்ஸில் வந்த இருவர் அவரை அழைத்துச் சென்றனர் என்றும் பின்னர் அவர் நேற்றுக்காலை நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு அண்மையில் அம்மன் வீதியில் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடக்கக்காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் நேற்றுக்காலை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பின்னர் அவரது சகோதரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

## இரு இளைஞர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தின்பின்னர் இருவரின் சடலங்களும் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இருவரின் சடலங்களும் பெற்றேர்களால் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுக் காலை மந்திகை வைத்தியசாலை முகாமையாளர் டாக்டர் எஸ், கதிரவேற்பிள்ளையினுல் பெற்றேர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறையில் நேற்று வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு, கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்ட மாணவர்கள் கற்கள், தடிகள் வீசிப் பொலிஸ்நிலையம் மீது தாக்குதல் நடத்தினர்கள். இதனைத்தொடர்ந்து மாணவ ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் சுட்டதில் ஒரு மாணவன் பலியானர். ஆறு மாணவர்கள் காயமடைந்தனர்.

கொழும்பிலும் பாடசாலை சிறுவர்கள் முதல் உயர் வகுப்பு மாணவர்கள் வரை தம்தம் பாடசாலைகள் முன்பாகக் கூடி நகரவீதிவழியாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்கள்.

இந்தியப்படையைத் திருப்பியழைக்குமாறு ஜனதிபதி விடுத்த வேண்டுகோளை இந்தியா நிராகரித்துவிட்டதாக செய்தி வெளியான சில மணி நேரங்களிலேயே மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறி ஆர்ப்பாட்டங்களில் குதித்தனர்.

## தினேஷ் கருத்து

(கொழும்பு)

இந்திய அமைதிகாக்கும் படையைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று ஜனதிபதி ஆர். பிரேமதாசா கேட்டுள்ளதை வரவேற்று மக்கள் ஐக்கிய முன்னணி செயலாளர் திரு. தினேஷ் குணவர்த்தன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அண்மைக்காலத்தில் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கு போராடி வருபவர்களின் விருப்பமும் இதுவாகவே இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பு அலுவலகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கச் செயலகத்திற்கு நேற்றுக் காலை சென்ற அரசியல் இணைப்பு அதிகாரி திரு. ஆ. முருகநேசன் உத்தியோக ரீதியாகத் தமது அலுவல்களை மேற்கொண்டார்

அங்கு சமுகமளித்தவர்களின் பிரச்னைகளைக் கேட்டறிந்ததோடு, அரசாங்க அதிபர் உட்பட, அங்கு கடமையாற்றும் மேல்மட்ட உத்தியோகத்தர்களை அழைத்து, நிர்வாக வேலைகள் தொடர்பாகப் பணிப்புரைகளையும் வழங்கினர்.

## பிரேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கொள்ளும் வரை அமைதிப் படையை விலக்கிக் கொள்ளமுடியாது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை குறித்து விமர்சித்த பி. பி. ஸி., வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குப் பூரண தன்னுட்சி கிடைக்கும்வரை இந்தியத் துருப்புக்கள் வெளியேருது என்பது போல் இருப்பதாகத் தெரிவித்தது.

இந்தியாவின் இந்தப்பதில் குறித்து இலங்கை அரசுதரப்பில் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை எதுவித கருத்தும் வெளியிடப்படவில்லை. ஆனுல் நேற்று நீண்ட நேரமாக நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதுகுறித்து ஆராயப்பட்டதாக தெரிகிறது.

அமைச்சரவையில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து இன்று அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org